அறிவிக்கை எண். 02/2020/மா.ஆ.சே.நி, நாள்: 18.06.2020

**கூட்டுறவுச் சங்கங்களின் கிருஷ்ணகிரி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**
**துணைப்பதிவாளர் (பொ.வி.தி) அலுவலகம், எண் 523/காந்திரோடு,**
**கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகம்,**
**அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில், கிருஷ்ணகிரி – 635 001.**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியாய விலைக் கடை விற்பனையாளர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேர்முகத் தேர்வின் மூலம் நேரடி நியமனம் செய்வதற்கு 20.07.2020, திங்கட்கிழமை அன்று பிற்பகல் 5.45 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | சம்பள ஏற்ற முறை | சங்கத்தின் வகை | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1. தொகுப்பு ஊதியம் ரூ.5000/– பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.4300–12000ல் காலமுறை ஊதியம். | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் | 50 |
| 2 | | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 15 |
| | | **மொத்தம்** | **65** |

**2. காலிப்பணியிடங்களுக்கான வகுப்புவாரி பகிர்மானப் பட்டியல் :-**

| பதவி | வகுப்பு வாரி இடஒதுக்கீடு | | | | | | | மொத்த காலிப் பணியிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பொது (GT) | பிற்படுத்தப் பட்டோர் (BC) | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) (BCM) | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / (சீர்மரபினர்) (MBC/ DC) | ஆதி திராவிட வகுப்பினர் (SC) | ஆதி திராவிட வகுப்பினர் (அருந்ததியர்) SC(A) | பழங் குடியின வகுப்பினர் (ST) | |
| நியாய விலைக் கடை விற்பனையாளர் | 20 | 18 | 2 | 13 | 10 | 2 | – | 65 |

**குறிப்பு –** மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை (Estimate Vacancy) தற்காலிகமானது (Tentative). இவை மாற்றத்திற்கும் சேர்த்தலுக்கும் உட்பட்டது.

**நிபந்தனைகள்:-**

1. மேற்படி காலிப்பணியிடங்களுக்கான பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது அரசுப் பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்புவாரி சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.
2. நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண் விண்ணப்பத்தாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.
3. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) தமிழ்வழி கல்வி பயின்றோர் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்குரிய அரசு ஒதுக்கீடுகள் இந்த நியமனத்தின் போது பின்பற்றப்படும்.
4. ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு/பணி/பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016 பிரிவு 3(i) (vii)).
5. மாற்றுத் திறனாளிகளில் பார்வைத்திறனற்ற நபர்கள் நியாய விலைக் கடை விற்பனையாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க இயலாது.
6. தமிழ்வழி கல்வி பயின்றோர் என்போர் இப்பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியை தமிழ்வழி (Tamil Medium) படித்தோராவார்.
7. மேற்படி பணியிடங்களுக்கான இறுதித் தெரிவு குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் ஆட்சேபனைக்குரிய காரணங்களைக் குறிப்பிட்டு மேல் முறையீடு செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் மேல் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

**3. தகுதிகள்:-**

**அ. வயது (01.01.2020 அன்றுள்ளவாறு)**

1. விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 31.12.2001 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).
2. விண்ணப்பதாரர்கள் 01.01.2020 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| வ. எண். | வகுப்பினர் | வயது வரம்பு |
|---|---|---|
| i) | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாதோர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்). | **அதிகபட்ச வயது வரம்பு இல்லை** |
| ii) | இதர வகுப்பினர் (OC). | **30 வயது** |
| iii) | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | **அதிகபட்ச வயது வரம்பு இல்லை** |
| iv) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | **48 வயது** |
| v) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத்திறனாளிகள் | **40 வயது** |

**ஆ. கல்வித் தகுதி:- (Educational Qualification)**

நியாய விலைக் கடை விற்பனையாளர்கள்: பன்னிரெண்டாம் வகுப்புத்தேர்ச்சி (+2 தேர்ச்சி) அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதி.

**இ. தமிழ் மொழித் திறன்:-**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழில் போதுமான அறிவு (Adequate Knowledge) பெற்றிருக்க வேண்டும்.

கீழ்க்காணும் தகுதியைப் பெற்றிருந்தால் ஒருவர் போதிய தமிழறிவு பெற்றவராகக் கருதப்படுவார். ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியும் அதற்கு மேலும் இருந்தால், பள்ளியிறுதிப் பொதுத் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி / மேல்நிலை வகுப்பு (பிளஸ்–2) / பட்டப்படிப்பு முதலியவற்றில் தமிழை ஒரு மொழிப்பாடமாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பள்ளியிறுதிப் பொதுத் தேர்வைத் தமிழில் எழுதித் தேர்ச்சி பெற்றிக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.

**ஈ. உடற்தகுதி சான்றிதழ்:- (Physical Fitness Certificate)**

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**4. தெரிவு முறை:- (Selection Procedure)**

அ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பர அறிவிக்கை மூலம் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் ஆகியோர்களில் தகுதி பெற்றவர்களை நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு அவர்கள் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இட ஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை ஆகியவை பின்பற்றப்பட்டு காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

ஆ) நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்ட தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்விற்கு அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும்.

இ) நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்வு அழைப்பாணை அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

**5. விண்ணப்பக் கட்டணம்:- (Application Fee)**

நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக் கட்டணம் ரூ.150/-.

**6. கட்டண விலக்கு:-**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள், அனைத்து பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு மேற்கண்ட விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து சான்று பெற்றிருக்க வேண்டும்.

‘‘ஆதரவற்ற விதவை’’ என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/– த்திற்கும் (ரூபாய் நான்காயிரம்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக்குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி / சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர், மறுமணம்புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவராக இருக்கும்பட்சத்தில் அவர்கள் எந்த பிரிவினை சார்ந்தவராக இருப்பினும் இதர வகுப்பினராகவே (OC) கருதப்படுவார்.

**7. விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை:-**

மேற்படி விண்ணப்பக் கட்டணம் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் (Nationalised Banks) **மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம், (District Recruitment Bureau, Krishnagiri. Payable at Krishnagiri)** என்ற பெயரில் வரைவோலையாக (Demand Draft) எடுக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் எண், மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவற்றை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும்.

வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும், திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

**8. தடையில்லாச சான்றிதழ்:- (No objection certificate)**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும்பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

**9. விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள் :-**

மேற்படி நியாயவிலைக் கடை விற்பனையாளர் பணிநியமனத்திற்கான விண்ணப்பப்படிவத்தை கீழ்க்கண்ட அலுவலகங்களின் வேலை நாட்களில், வேலை நேரத்தில் **இலவசமாகப்** பெற்றுக்கொள்ளலாம்.

1. எஸ்.495 கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், எண்.523, காந்திரோடு, கிருஷ்ணகிரி மாவட்டம் – 635001. தொலைபேசி எண். 04343 – 236024.
2. எண்.கே.கே.106,காவேரிப்பட்டிணம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், சேலம் மெயின் ரோடு, காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635112. தொலைபேசி எண். 04343 – 250034.
3. டி.டி.9. ஊத்தங்கரை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கிருஷ்ணகிரி மெயின்ரோடு, B.D.O. அலுவலகம் எதிரில், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 207. தொலைபேசி எண். 04341 – 220029.
4. எஸ்.495 கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், திருப்பத்தூர் மெயின் ரோடு, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 206. தொலைபேசி எண். 04341 – 252334.
5. எஸ்.5920. மருதேப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், ஒரப்பம், பர்கூர் (வட்டம்), கிருஷ்ணகிரி (மாவட்டம்) – 635 108. தொலைபேசி எண். 9171759158.
6. டி.டி.108, மத்துார் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், கிருஷ்ணகிரி மெயின்ரோடு, மத்துார் அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 203. தொலைபேசி எண். 04341–256257
7. கே.கே.249.சிகரமாகனப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், தோட்டக்களம் கிராமம், சிகரமாகனப்பள்ளி அஞ்சல், வேப்பனப்பள்ளி வழி, கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம். 635 121. தொலைபேசி எண்.9442579338
8. கே.கே.127,ஒசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், ஐசிஐசிஐ வங்கி பின்புறம், வசந்த நகர், ஒசூர். 635109. தொலைபேசி எண். 04344–244587
9. எஸ்.527, கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், நேரு நகர், தென்கனிக்கோட்டை மெயின்ரோடு, கெலமங்கலம் அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். 635119. தொலைபேசி எண்.04347–232227
10. எஸ்.2825.தளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், B.D.O. அலுவலகம் மெயின்ரோடு, தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 118. தொலைபேசி எண். 04347–234380
11. டி.கே.85.அனாசந்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், பஜார் தெரு, சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 117. தொலைபேசி எண்.9944331072.
12. எஸ்.4098.உலிமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், அன்னியாளம் அஞ்சல், தேன்கனிக்கோட்ட வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 107. தொலைபேசி எண். 04347–235486

**10. விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:-**

a) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட அனைத்து சான்றிதழ்களின் நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை (Original Certificate) இணைத்து அனுப்பக்கூடாது.
b) சான்றிதழ்கள் இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**11. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல் :-**

விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1. விண்ணப்பப் படிவங்கள் நீலம் (அ) கருமைநிற பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும்.
3. கையொப்பம் இல்லாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்ட வேண்டும்.
6. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நேர்முகத்தேர்வுக்கான அழைப்பு கடிதத்தில் (Interview call letter) பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி சுய விலாசம் எழுதி இணைத்து அனுப்பவேண்டும்.
7. விண்ணப்பதாரர் சுய முகவரியிட்ட ரூ.25/—க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய 24X10 செ.மீ. உறையினை (Self Addressed cover) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

**<u>12. இதர நிபந்தனைகள் :-</u>**

1. நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் உடனடியாக இரத்து செய்யப்படும்.
2. காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையினை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு/ திருத்துவதற்கு/ மற்றும் கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு முழு உரிமையுண்டு

**<u>13. பொது விவரங்கள் :-</u>**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு **20.07.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும்.** இதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது. அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**<u>விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி</u>**

**இணைப்பதிவாளர் / தலைவர், மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,**
**துணைப்பதிவாளர் (பொ.வி.தி) அலுவலகம், எண் 523 /காந்திரோடு, கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகம்,**
**அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில், கிருஷ்ணகிரி – 635 001.**

**உதவி மையம் தொடர்பு தொலைப்பேசி எண் – 04343 – 230015.**

**இணைப்பதிவாளர் / தலைவர்,**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**